# ஜாமக்காரன்
# JAMAKKARAN

VOLUME - 3 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 2

FEBUARY 2019 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=





*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


ஜா ம க் கா ர ன் JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பான ஜாமக்காரன் வாசகர்களுக்கு,

உங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சமாதானம் உண்டாவதாக.

- கடந்த ஜனவரி ஜாமக்காரனில் எழுதிய அந்தமான் தீவைப்பற்றிய செய்தியை வாசித்த பலரை அந்த செய்தி ஜெபத்தில் ஊக்குவித்திருக்கின்றன. எப்படியாவது யார் மூலமாவது அந்த ஜாரவாஸ் தீவு மக்களுக்கு சுவிசேஷம் செல்ல வேண்டும் என்று பலர் அழுது ஜெபிக்க தொடங்கியதாக அறிந்து தேவனைத் துதிக்கிறேன்.
- சென்னை பிஷப் Rt.REV ஜார்ஜ் ஸ்டீபன் அவர்களின் ஆடம்பர விவரம் மட்டும் செய்தியாக ஜாமக்காரனில் எழுதினேன். அதை வாசித்த உடனே சென்னை CSI சபைகளிலிருந்து பிஷப் அவர்களைப்பற்றி மள மளவென்று பல வினோத செய்திகள் குவிந்த வண்ணம் இருக்கின்றன.

2ஆயிரம் ரூபாய் நோட்டுகளை கழுத்தில் அணிந்தபடி பவனி வருவது, பிஷப்பும் அவர் மனைவியும் ராஜா ராணி போல் குதிரை ரதத்தில் வலம் வரும் புகைப்படங்களும் அதோடு இன்னும் பல புகைப்படங்கள் அவரின் ஆடம்பர வாழ்க்யை எப்படியெல்லாம் அனுபவிக்கிறார் என்பதை காட்டுக்கிறது. ஆயர்கள் பலர் எனக்கு பிஷப்பற்றியும் அவரின் ஆடம்பரத்தைப்பற்றியும் நான் எழுதியதை குறித்து அவர்கள் நன்றி கூறி எனக்கு கடிதம் எழுதினார்கள். மேலும் பிஷப் அவர்களின் மனைவியும் அவர் சகோதரனும்தான் இப்போது ஆயர்களையும்,டையோசிஸ்சையும் ஆட்டிப் படைக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். பிஷப்பால் அவர்களை அடக்கவோ,தடுக்கவோ இயலவில்லை என்றும் அறிவித்துள்ளார்கள். ஆனால் ஜாமக்காரன் செய்தி பிஷப் அவர்களுக்கு சென்றுவிட்டது நிச்சியமாக அவர் தன்னை மாற்றிக்கொள்ள முயலுவார் என்று நம்புவோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

☐ வீட்டு சபைகளைப்பற்றிய கட்டுரையை தேர்ந்தெடுத்து வெளியிட்டிர்கள். அது எங்களுக்கு சந்தோஷத்தை கொடுத்தது. நாங்களும் வாரம் தோறும் எங்கள் வீட்டில் சிறு கூட்டமாக கூடி ஜெபிக்கவும்,வேத வசனங்களை தியானிக்கவும் தொடங்கிவிட்டோம். LEF சபைக்கு தான் போகிறோம், ஆனால் அங்கு உப்பு சப்பு இல்லாத பிரசங்கம். ஆனால் எங்கள் வீட்டில் கூடுகிற குடும்பங்கள் மூலமாக பல வேத ஆராய்ச்சிகளை ஆராய்கிறோம். வேத பாடமாக பகிர்ந்துக்கொள்கிறோம். அவரவர் அறிந்ததை பகிர்ந்துக் கொள்வதை கேட்கும்போது அது எங்களை வசனத்தில் வளர்த்துகிறதாய் இருக்கிறது. ஜாமக்காரனுக்காக தெய்வத்தை துதிக்கிறோம்.

**தொலைப்பேசி**

☐ என்னோடு ஜெபிக்க கேட்டுக் கொள்கிறவர்கள் குடும்ப பிரச்சனைகளில் ஆலோசனை கேட்க விரும்புகிறவர்கள் தொலைப்பேசி வழியாக என்னோடு தொடர்பு கொள்ள முயன்று லைன் கிடைக்காமல் சலித்து போனார்கள்.முதல் காரணம் நான் வீட்டில் இல்லாதிருப்பது,வாரத்தில் ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் மட்டுமே வீட்டில் இருப்பதால் ஒரேசமயத்தில் பலர் தொலைப்பேசியில் பேச முயலும் போது அவர்களுக்கு தொடர்பு கிடைப்பதில்லை.

ஆகவே தான் வாசகர்கள் தயவு செய்து கடிதம் மூலம் எனக்கு விவரம் அறிவிக்கலாம். E-MAIL மூலம் அறிவிக்கலாம்,என்பதில் கடிதம் உங்களுக்கு எழுத தாமதப்பட்டாலும் உடனே நான் ஜெபித்துவிடுகிறேன் கடிதத்தில், E-MAILலில் உங்கள் **கைப்பேசி** அல்லது **தொலைப்பேசி** எண்ணை குறிபபிட்டால் எனக்கு நேரம் கிடைக்கும்போது ஒன்றன் பின் ஒன்றாய் தொலைப்பேசி எண்ணை தெரிந்தெடுத்து உங்களோடு பேச முடியும். தொலைப்பேசியிலேயே ஜெப்பிக்கவும் முடியும். கடிதத்தை விட தொலைப்பேசியில் பல விஷயங்களுக்கு விளக்கங்களை தெளிவாக பேசி அறிவிக்கலாம். உங்கள் யாவரும்காகவும் தொடர்ந்து ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது.

இந்த மாத ஜாமக்காரனில் CSIக்கு வர இருக்கும் ஆபத்தை குறித்து விளக்கியிருக்கிறேன். CSI மடரேட்டர் அவர்கள் CSI சினட் அலுவலத்திலிருந்து எழுதிய அறிக்கை நம் CSI ஆயர்கள் பலருக்கு தெரியவில்லை. சபை மக்களுக்கு எப்படி தெரியும் ஆனால் மாமரேட்டரின் அறிக்கையை சபைக்குள் நடைமுறையில் செயல்படுத்த சபைமக்களை கட்டாயப்படுத்தும் போதுதான் பலர் அதிர்ச்சியடைவார்கள்.

☐ **குறிப்பு:** இந்த மாத ஜாமக்காரன் செய்தி விவரங்கள் CSI சபைக்களுக்காக மட்டும் வெளியிடப்படடதாகும் ஆகவே வெளி நாட்டில் வாழும் வாசகர்கள் இந்தியாவில் உள்ள மற்ற சபையை சார்ந்த வாசகர்களுக்கு இது விளங்காது. உங்கள் எல்லாருக்குமான செய்திகளை ஆவிக்குறி ஜாமக்காரனில் இந்த வெளியிடவில்லை பொருத்துக்கொள்ளுங்கள்.

தொடர்ந்துவரும் செய்திகளைவாசித்து

ஜெபியுங்கள்

**Dr. Pushparaj**

# CSI சபைகளுக்கு ஆபத்து

அன்பானவர்களே! இப்போது நான் எழுதபோகும் முக்கிய செய்திகளை வாசித்து ஏனோ **CSI** சபைகளின் உள்குத்து சண்டைகளைப்பற்றி நான் குறிப்பிடவில்லை. ஆனால் **பிசாசு CSI**யை குறிவைத்து அதன் தலைவர்களான **மாடரேட்டர்** முதல் **பிஷப்மார்** வரை அவன் தன் கைபொம்மையாக்கி நம் **CSI** சபைகளை எப்படி **சீரழிக்க போகிறான்** என்பதை நீங்கள் அறிந்து இந்த சீரழிவிலிருந்து நம் சபைகளை எப்படி காப்பாற்றலாம் என்பதை திட்டம் பண்ணுங்கள். முக்கியமாக **DC** மெம்பர்கள்-சபை நிர்வாகிகள் சபை மக்களோடு இணைந்து வரப்போகும் ஆபத்திலிருந்து எப்படி தப்பிக்கலாம் என்று திட்டம் பண்ணுங்கள். ஆயர்கள் இதில் சேர்க்க வேண்டாம் அவர்கள் அதிகாரத்துக்கு கட்டுப்பட்டவர்கள். மேல் அதிகாரிகளால் பழி வாங்கப்படுவார்கள்.

- **CSI** லூத்தான், போன்ற மெயின்லைன் சபைகளின் நிர்வாக அதிகாரிகள் **பிஷப்மார்களோ-மாடரேட்டரோ** அல்ல. **சபை மக்களாகிய** நீங்கள்தான் அதிகாரிகள். அதை **CONGRIGATIONAL DOMINATION** என்று கூறிவார்கள்.

**மக்களுக்காகத்தான் சபை** ஆலயமும்-சபையும் இருக்கிறது. அப்படியே சபைக்காக-மக்கள் அல்ல மக்களுக்காகத்தான்-சபை.

இப்போதுள்ள சபைகளின் அமைப்பின்படி **சபை மக்களின்** வேலைகாரர்கள்தான் **பிஷப்பும்- மாடரேட்டரும் ஆகும்.** அதாவது சபை மக்களுக்கு ஆலோசனை கொடுத்து உதவி செய்பவர்களாகும். இந்த உண்மையை அறியாமல் **பிஷப்மார்களையும்-மாடரேட்டரையும்** ராஜாவின் ஸ்தானத்தில் வைத்ததால்தான் அவர்கள் என்ன சொன்னாலும்ஏன்?எதற்கு?என்று கேட்காமல் அடிமைகள் போல் கீழ்படிகிறார்கள். **CSI,** லூத்தர ஆகிய சபைகளின் இந்த **PROTOCAL (ஒழுங்கு வரிசை)** வரிசையைப்பற்றி நாம் முறையோடு புரிந்துக்கொள்ளும் வரை நாம் எல்லாரும் சபை தலைவர்களின் அடிமைகள்தான்.

அதனால்தான் **அந்திகிருஸ்துவின்** ஆட்கள் முதலில் **மாடரேட்டர்** முதல் **பிஷப்** வரை உயர்பதவியில் உள்ளவர்களை தன் வசமாக்கிக்கொண்டான். (எல்லா மாடரேட்டர்களும் பிஷப்மாரும் அந்திகிறிஸ்துவின் வலையில் விழுந்து விட்டார்கள் என்று கூறவில்லை என்பதை வாசிப்பவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். அவன் சொல்வதற்கு **மாடரேட்டர்** கீழ்படியவேண்டும் மாடரேட்டர் கூறுவதற்கு பிஷப் கீழ்படியவேண்டும். **பிஷப்** ஆயர்களுக்கு கட்டளையிட **சபைமக்கள்** குனிந்த தலை நிமிராத புல்லில் மட்டும் கவனம் செலுத்தும் ஆடுகளாக மாரிப்போனதால் தான் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே கீழ்படிகிறார்கள். அந்திகிருஸ்து தன் திட்டத்தை எப்படி நடைமுறைபடுத்துகிறான் என்பதையும் **CSI** சபைகளுக்கு ஆபத்து என்றேனே! அது என்ன? என்பதையும் கீழே நான் எழுதியதை ஜாக்கிறதையாக வாசித்துஅறியுங்கள்.


# அந்திக்கிறிஸ்துவின் ஆட்கள் CSIக்குள் நுழைவு

இயேசுகிருஸ்துவின் இரண்டாம் வருகையின் சமயத்தில் **அந்திகிருஸ்து** வெளிபடுவான் என்பதை நம் வேதம் **திர்க்கதரிசனமாக** அறிவித்ததை நாம் அறிவோம். **அந்திகிருஸ்து** வெளிப்படுவதற்குமுன் அவனுடைய (பிசாசின்) ஆட்கள் **அந்திகிருஸ்துவுக்கு** வழியை ஆயத்தம் செய்வார்கள். (பிசாசும்- அந்திக்கிறிஸ்துவும் ஒரே நபர்தான்). இயேசு கிருஸ்துவுக்கு முன் அவருக்கான வழியை ஆயத்தம் செய்ய **யோவான் ஸ்நானகனை** அனுப்பி **எப்படி பிதாவானவர்** ஏற்பாடு செய்தாரோ அதே வழியை பின்பற்றி **அந்திகிருஸ்துவும்** தன் **ஆட்களை** அவனுடைய வெளிபாட்டுக்கு முன்பதாக அனுப்பி வைப்பான். அதன்படி அந்திகிறிஸ்துவின் ஆட்கள் ஏற்கனவே உலகத்துக்குள் வந்துவிட்டார்கள்.

**அந்திக்கிறிஸ்துவின்** ஆட்கள் இப்போது தங்கள் திட்டத்தை செயல்படுத்த **உலக கிறிஸ்தவ சபைகளின் தலைமையை** தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டான். கிறிஸ்தவசபை **தலைமையின்** பெயர்தான் **W.C.C** என்பதாகும். **WORLD CHURCH COUNCIL (முழு உலக கிருஸ்தவ சபைகளின் ஆலோசனை குழு.)**

ஆதாரம்: http://CSI 1947.com/ECOLOGICAL-CONCERNS/UPLOADS/RESOURWS DOCUMENTS IKOS.PDF.

**அந்திக்கிறிஸ்துவின்** ஆட்கள் இந்த **W.C.C**யை தங்கள் கட்டுபாட்டில் கொண்டு வந்த உடன் **கிறிஸ்துவுக்கு கொடுக்க வேண்டிய தெய்வ மகிமையை** மக்களின் மனதிலிருந்து நீக்கும் வேலையில் இறங்கிவிட்டான். இயேசு கற்பித்த வசன உபதேசத்தைவிட்டு கிருஸ்தவர்களை வேறுபடுத்தி **வேதத்தில் இல்லாத** புது உபதேசத்தை **கிருஸ்தவ மக்கள்** மனதில் திணிக்க ஏற்பாடுகளை செய்துவிட்டான். **இயேசுவோடு** எல்லா நாடுகளின் கலாச்சார **விக்கிரக தெய்வங்களையும்**, பிசாசின் ஆவியையும் தெய்வமாக இணைத்து **மற்ற விக்கிரக தெய்வங்களைப்போல இயேசுவும்** ஒரு தெய்வம் என்றான். **எல்லா தெய்வமும் ஒன்று எல்லா மதமும் ஒன்று** என்ற புது சித்தாந்தத்தை C.S.I. சபையின் கொள்கையாக்கி, அதையே சட்டமாக்கி **சபைகளுக்குள்** திணித்தான். இப்படிப்பட்ட சித்தாந்த குழப்பங்கள் **W.C.C** தொடங்கும்போது ஆரம்பத்தில் இல்லை.



**Rt.Rev. சாமுவேல் அமிர்தம்**

**ஜெனிவா** நாட்டில் **W.C.C** யின் உலக நாடுகளின் கிறிஸ்தவ சபைதலைவர்களின் கூடுகை கூடிய போது பிசாசின் திட்டப்படி அவன் விஷத்தை முதலில் அவர்களுக்குள் கலந்தான் இதற்கு **தென் இந்தியாவில் தெற்கு CSI கேரளா பிஷப்பாக** பதவி வகித்த பிஷப் **Rt.Rev.சாமுவேல் அமிர்தம்** அவர்களைத்தான் தெரிந்தெடுத்தான். **அந்திகிருஸ்துவின்** ஆட்கள் தென் இந்தியாவில் **மதுரையில்** அரசரடியில் உள்ள **தமிழ்நாடு வேதாகம கல்லூரி (T.T.C**.)யின் தலைவராக இருந்த அவரை தேடிகண்டுபிடித்தான். அவர் மூலமாய் தன் திட்டத்தை செயல்படுத்தினான். இவர் அன்றைய நாட்களில் மதுரை **அரசரடி வேதாகம கல்லூரியின்** வாசலில் **சிவன்,பிரம்மா,சரஸ்வதி** நடுவில் **ஓம்** என்ற வார்த்தையை **சிலுவை நுனியில்** வைத்து அழகு பார்தார்.

**அவரை தடுப்பார் யாரும் இல்லை!** கேள்வி கேட்பார் யாரும் இல்லை..!


பல வருடங்களுக்குமுன் பிஷாப் சாமுவேல் அமிர்தம் அவர்கள் வியாதி படுக்கையில் மூத்திரத்தில் கல் அடைப்பு உண்டாகி வலியினால் துடித்தபோது ஆயர்கள் சுற்றி நின்று ஜெபித்தனர், சுகம் கிடைக்கவில்லை. மேலும் அன்று சுகம் அளிக்கும் வரம் பெற்ற பிரபல ஊழியன் ஒருவர் திருவனந்தபுரம் வந்திருந்தார். அவர் படுக்கை அறையில்வந்து பிஷப் அவர்கள்மீது கை வைத்து இயேசுவிடம் ஜெபித்தார். ஆனாலும் வலி நிற்கவில்லை கூடுதல் வலியால் துடித்தார். அப்போது அவரின் பழைய சினேகிதன் **சிவ பக்தன்** ஒருவர் இதை கேள்விபட்டு அவரிடம் வந்து அவர் தெய்வமான சிவனை வணங்கி **வீபூதி** பொட்டலத்தை தலையனையின்கீழ் வைத்து விட்டு போய்விட்டார் அவர் போன சில நிமிடங்களில் வலி நீங்கி சுகம் பெற்றார் என்று அவரே இந்த சம்பவத்தை தன் சாட்சியாக பத்திரிக்கையில் எழுதியதை ஜாமக்காரனில் நான் அன்று வெளியிட்டதை வாசகர்கள் அறிவீர்கள்.

மேலும் அவர் கூறினார் இயேசுவால் மட்டும் சுகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை மாற்றுங்கள் மற்ற தெய்வங்களாலும் (சிவனாலும்) சுகம் கிடைக்கும் என்பதை என் சாட்சி மூலமாவது விளங்கி கொள்ளுங்கள் என்ற மிகப்பெரிய குண்டை தூக்கிப் போட்டார். அன்று கிருஸ்து சபைகள் அதிர்ச்சிக்குள்ளாயின. **சாமுவேல் அமிர்தம்** அவர்கள் கிருஸ்தவ சபைக்களுக்கு பிஷப்பாக பணியாற்றுகிறாரா அல்லது புற மதஸ்தருக்கு பிஷப்பாக பணியாற்றுகிறாரா? என்று கேள்வி எழுப்பினார்கள்.

அவர் உள்ளத்தில் ஊறிப்போன **பிசாசின்** அந்த நவீன கொள்கையை முதன் முதல் W.C.C யில் திணித்து நடைமுறைக்கு கொண்டு வந்தவர். **பிஷப் சாமுவேல் அமிர்தம்** அவர்களாகும். இவருக்கு பின்பலமாக **UTC (BANGALORE)** வேதமாக கல்லூரி முதல்வராக இருந்த **டாக்டர்.ரசல்** அவர்கள் அமைந்தார்.

இவர்கள் யாவரும் **அந்திகிறிஸ்துவால்** முன் குறித்த நபராக அமைந்தார்கள். அவன் திட்டப்படி இந்தியாவில் **மிகப்பெரிய** திருச்சபைகள் அடங்கிய பெரிய ஸ்தாபனம் **CSI (CHURCH OF SOUTH INDIA)** சபைகளுக்குள் **அந்த நவீன உபதேசமான தன் விஷத்தை** கலக்க பிசாசு முதல் முயற்சியில் இறங்கினான்.

அந்த நவீன உபதேசத்தைத்தான் நீங்கள் திருநெல்வேலில் 1992ல் நடந்த **CSI** சினாட் கூட்டத்தில் 22 டையோஸிஸ் பிஷப்மார்,ஆயர்கள் கூடிய அந்த கூட்டத்தின் ஆராதனை கிரம **(LITERGE)** புஸ்த்தகத்தில் அச்சடிக்கப்பட்டு அத்தனை பிஷப்மார்களின் கையிலும் அதை கொடுத்து அவர்களையும் அறிக்கையிட வைத்தான்.


WORSHIP
"GOOD NEWS TO ALL CREATION"

The Church of South India Synod
Twenty Third Session
Palayamkottai
11-15 January 1992

**அதில் எழுதப்பட்ட ஆராதனை வார்தைகள் என்னவென்றால்:**

## பிஷப்மார் செய்த ஜெபத்தின் ஆரம்பம் இதுதான்:

**(ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது):**

**எங்கள் தேவனே,**

**உம் மன உருக்கத்தை இயேசுவில் காண்கிறோம்,**
**நீரே சிவனாயிருந்து தயையுள்ளவராயிருக்கிறீர்**
**நீரே ~~அல்லாவாக~~ இரக்கமுள்ளவராக இருக்கிறீர்**
**நீரே ~~புத்தர்கள்~~ ஆராதிக்கும் மனஉருக்கமான புத்தராக இருக்கிறீர்.**
**~~தாமரை பூக்களை~~ கையில் ஏந்தி உம்மை சுற்றி ~~வந்து உம்மை~~**
**வணங்குகிறோம்.**

**இப்படி துதித்தவுடன் அனைத்து பிஷப்மாரும் ஆமென் என்றார்கள். ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடவது என்று அர்த்தமாகும்.**

**இயேசுவே நீரே அல்லா, நீரே சிவன், நீரே புத்தன்,** உம்மை தாமரை பூக்களால் மூன்று முறை வலம் வந்து நமஸ்கரிக்கிறோம். ஆராதனை செய்கிறோம் என்று அத்தனை பிஷப்மாரையும் வாய் திறந்து கூறவைத்து ஆமென் போடவைத்தானே! இது எத்தனை பெரிய தேவ துாஷ்ணம்.

அதே ஆராதனை கிரமத்தை சபையின் ஆராதனை புத்தகத்திலும் சேர்த்து அனைத்து CSI சபை மக்களையும் ஆராதிக்கவைக்க இவன் எடுத்த முயற்சியை இந்த ஜாமக்காரனால் தான் முறியடிக்கப்பட்டது. அந்த ஆராதனையில் உபயோகித்த வார்த்தையை அப்படியே போட்டோ காப்பி எடுத்து டையோசிஸ் 22 மக்களுக்கும் அனுப்பி இந்த ஆராதனையை நாங்கள் **எதிர்க்கிறோம், வெறுக்கிறோம்** என்று ஒவ்வொரு CSI சபையும் கமிட்டியை கூடவைத்து தீர்மானம் எடுக்க வைத்து அதை மினிட்ஸ்ஸில் எழுதி **பிஷப்மார், மாடரேட்டர்** யாவருக்கும் அறிவிக்க வைத்தேன். உடனே அந்த ஆராதனை கிரமம் வாபஸ் வாங்கப்பட்டது.

**இது அந்திகிறிஸ்துவின் ஆட்டங்களின் முதல் முயற்சியாகும். ஆனால் அது படுதோல்வியை கண்டது.**

## அந்திகிறிஸ்துவின் ஆட்களின் இரண்டாவது முயற்சி

❖ இயேசு கிறஸ்துவின் இரண்டாம் வருகைக்குமுன் **விசுவாச துரோகம்** நேரிடும் என்பது நம் வேதம் கூறிய தீர்க்கதரிசனமாகும்.

**"எவ்விதத்திலும் ஒருவனும் உங்களை, மோசம் போக்காத படிக்கு எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் விசவாச துரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகன் (அந்திகிறிஸ்து) என்ற பாவமனுஷன் வெளிபட்டாலொழிய அந்த (முடிவு) நாள் வராது" 2 தெச2:3.**

இதன் அர்த்தம் என்னவென்றால் **கிறிஸ்துவ சபை** தனது **கொள்கை** மற்றும் **விசுவாச போதனைகள் உள்ள அடங்கி** வேதத்தின் **நம்பிக்கைக்கு முரணான கருத்துகளை**

ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால் அதைத்தான் வேதவன்மும் **விசுவாச துரோகம்** என்று அறிவிக்கிறது.

இப்போது **CSI** சபைகளின் உபதேசங்களில் சமீப காலமாக உருவான மாற்றங்களை இதை வாசிக்கிற நீங்கள் கவனித்தீர்களேயானால் மேற்கண்ட வசனங்கள் உறுதியாகி கொண்டு வருகிறதை உணரலாம்.

வாசகர்களாகிய நீங்கள் இனி நான் எழுதப்போகும் விவரங்களை விளையாட்டாக எடுக்காமல் மிக ஜாக்கிறதையாக கவனிக்க கேட்டுக்கொள்கிறேன். இதுவரை Dr.புஷ்பராஜ் இப்படித்தான் எல்லாரையும் குற்றம் சொல்லிகொண்டு திரிந்தார் என்று எண்ணாமல் இப்போது நான் எழுதுவதை மிகவும் சீரியஸாக கவனித்தால்தான் உங்களுக்கு நல்லது.

❖ சினாட் லெட்டர் ஹெட் கடந்த வருடம் **CSI** மாடரேட்டர் **Most Rev.Thomas K. Oomman** அவர்கள் சாம்பல் புதன் முதல் தொடங்கும் **40 நாள் உபவாச நாட்களில் பட்டினி கிடந்து** ஜெபிக்கவேண்டிய ஜெப குறிப்புகளை **CSI** சினாட் மூலமாக அனைத்து **CSI** சபை டையோசிஸ்களுக்கும் கட்டளை அறிக்கையாக (தனிச் சுற்றுக்காக என்ற பெயரில்) வெளியிட்டார். மாடரேட்டரின் அந்த பிழையான உபதேச கட்டளைகளை நான் விமரிசித்து ஜாமக்காரனில் எழுதியதை நீங்கள் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

மாடரேட்டரின் அந்த அறிக்கையில்தான் **கிறிஸ்தவ வேதத்துக்கும், கிறிஸ்தவ விசுவாசத்துக்கும்** விரோதமான இரண்டு **விசுவாச துரோக** வெளிப்பாடுகள் காணப்பட்டன.

1) **சுற்றுச்சூழல் பாதுகாப்பு** என்ற புது விஷயத்தை கிறிஸ்தவ **CSI** சபையின் விசுவாச கட்டளையாகச் சேர்க்கப்பட்டது.

2) **பாலின சமத்துவம் - Gender Equity**



Most Rev.
Ryder Devapriyam,

**1) சுற்று சூழல் பாதுகாப்பு என்ற கிறிஸ்தவ புது விசுவாச கொள்கை. இந்த உபதேசத்தை முதன் முதல் இந்தியாவில் செயல்படுத்த முன்வந்தவர். தென் இந்தியாவில் சிஎஸ்ஐ சபைகளின் மாடரேட்டர் Most Rt.Rev.Ryder Deva piryam அவர்களாகும்.**

**இரண்டாவது இப்போதைய CSI மாடரேட்டர் Most Rev. Thomas K. Oomman,** Kottayam (Kerala) **அவர்கள் ஆகும்.**



Most Rev.
Thomas K. Oomman,

**CSI சபைகளின் இந்த இரண்டு பிராதன தலைவர்களையும் (பிசாசு) அந்திகிறிஸ்துவின் ஆட்கள் தங்கள் திட்டத்தை இந்தியாவில் நிறைவேற்ற தெரிந்துக்கொண்ட அந்தி கிறிஸ்துவின் பாத்திரங்களாகும்.**

**தென்** இந்திய திருச்சபையானது **CSI** சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற **சமூக சேவையை** தன் **CSI** சபைகளின் **விசுவாச கொள்கையில்** ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டது.

ஆதாரம்**:** http://CSI 1947.COM/ECOLOGICAL-COCERNS/UPLOADS/RESOURCES/ DOCUMENTS/OIKOS_AUGUST_2015.PDF.

http://ECOLOGICAL CONDERNS,CSI 1947.COM/ARCHIVES19

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு** நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒரு பகுதி அல்ல. என்று என்னைப்போல் வேறு யாராவது கூறினால் அவர்கள் **பாவிகள்,** அவர்கள் நம் CSI சபையிலிருந்து (Excommunicate) **வெளி தள்ளப்படவேண்டியவர்கள்** என்று இவர்கள் கூற தயங்கமாட்டார்கள்.

**இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது;**
**ஒருவனை பகைத்து மற்றவனை சிநேகிப்பான் - அல்லது**
**ஒருவனை பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைப்பண்ணுவான்**
**தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.** மத் 6:24.

**இவர்களின் வஞ்சகமான வியாக்கியானம் என்னவென்றால்:**

☐ எல்லாப் **படைப்புகளுக்குள்ளும்** கடவுள் உண்டு - **SEEING GOD IN EVERY CREATION** மேலும் **வேத புத்தகம்தான்** பூமியில் உள்ள மக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மிக முக்கியம் என்ற அடிப்படை விசுவாச எண்ணத்திலிருந்து கிறிஸ்தவ சபை மக்களை **வெளியே கொண்டுவர வேண்டும்** என்ற திட்டத்தை அந்திகிறிஸ்துவின் ஆட்கள் இப்போது கிறிஸ்தவ சபைக்குள் செயல்படுத்த தொடங்கிவிட்டார்கள். **2015 ஆகஸ்ட் மாதம் அன்றைய CSI** மாடரேட்டர் MOST REV.**G.தேவசீர்வாதம்** அவர்கள் EARTH BIBLE SERMONS(VOLUME1) என்ற புத்தகத்தை வெளியிட்டார். அதன் முதல் காப்பியை **CSI** கொச்சின் டையோசிஸ் பிஷப் **Rt.REV.BAKER NINAN FENN(CHAIRMAN OF THE ECO-LOGICAL CONCERNS COMMITTE OF CSI)** அவர்கள் பெற்று அதை நடைமுறைபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த புத்தகத்தில **அந்தக்கிறிஸ்துவின்** திட்டம் வெளிபட்டுள்ளது. அதன் விவரம் இப்படி ஆரம்பிக்கிறது. நம் ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்து இப்போது இருந்தால்** சுற்றுச்சூழல் பிரச்சனைகளை எப்படி எதிர் கொள்வார்? என்பதை விளக்கும் வன்னமாக உள்ளது. இவர்களின் இந்த சந்தேக கேள்வி **இயேசு கிறிஸ்து இப்போது இல்லை** என்பது இவர்களின் விசுவாசமாக எண்ணத்தோன்றுகிறது.

**Green Covenant** பசுமை உடன்படிக்கை என்ற பெயரில் 10 கட்டளைகளை **CSI** சினட் வெளியிடப்பட்டுள்ளது.


இது Eden Eco-Spirituality Centre **ஒத்தெரா** என்னும் இடத்தில் 2017 செப்டம்பர் 1ம் தேதி நடைபெற்ற **World Day of Prayer for the Creation** என்ற கூடுகையில் இவர்கள் கலந்து கொண்டு அந்த புஸ்தகத்தை வெளியிட்டார்கள். இந்த புது உடன்படிக்கையான (10 கட்டளைகளை) **நாங்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிப்போம்** என்ற **உறுதி மொழி** எடுத்துக் கொண்டார்கள்.

**Ecological activities of Church of South India(CSI)**



Church of South India

**Department of Ecological Concerns**



*Mr.Jairam Ramesh M.P., former Central Minister for Environment, inaugurated the Silver Jubilee Celebrations of the Ecological Committee of the CSI Synod on Earth Day 2017(22nd April) at the CSI Synod Centre, Chennai*

**அதில் உள்ள இரண்டாம் கற்பனை கீழே வாசியுங்கள்:**

**"KNOW THAT YOU ARE NOT TO BE "PANTHEISTIC" WORSHIPPING ANY OTHER IMAGES OR IDOLS, BUT TO BE "PAN-EN-THEISTIC" SEENIG ME IN EVERY CREATION, RESPECT THE INTEGRITY OF ALL CREATIONS"**

மேலே எழுதப்பட்ட வார்த்தையில் (பிசாசு) மிக வஞ்சகமாக **நாம் விக்கிரக ஆராதனை செய்யக்கூடாது** என்ற வார்தையை **முதலாவதாக எழுதினார்கள், இப்படி எழுதுவதன் மூலம்** இவர்கள் சொல்லபோவது **கிறிஸ்தவ உபதேசம்** என்று நாம் கருதவேண்டும் என்பதற்காக அந்த குறிப்பிட்ட வார்த்தையை எழுதிவிட்டு அடுத்ததாக **பிசாசின்** புது திட்டத்தை புகுத்துவதை **எழுதப்பட்ட வார்த்தைகளில்** கவனியுங்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் **விக்கிர ஆராதனை செய்யாமல்** அதற்கு பதிலாக உலகத்தின் எல்லா **படைப்புகளுக்குள்ளும்** நாம் கடவுளைக் (இயேசுவை என்று குறிப்பிடாமல்) காணவேண்டும் என்கிறார்கள்.

☐ **கவனியுங்கள்: எல்லா படைப்புக்குள்ளும் கடவுள் இருக்கிறார்** என்பது கிறிஸ்தவ உபதேசம் அல்ல.

**கடவுளின் படைப்பு** என்று சொல்லும் போது **தேவதூதர்களும்** படைக்கப்பட்டவர்கள் தானே! அந்த **தூதர்களில் ஒருவன்தான் சாத்தான்(லூசிப்பர்)** என்கிற தூதன். **அப்படியானால் சாத்தானில் நாம் கடவுளை காணமுடியுமா!** (இவர்களின் கூற்றுப்படி கடவுளால் படைக்கப்பட்ட தூதனாகிய லூசிப்பராகிய பிசாசை) கிறிஸ்தவர்களை வணங்க வைக்கும் பயங்கர திட்டமாக இது தோன்றவில்லையா? என்ன ஞானமான தந்திரம் இது! அடுத்து **எல்லா படைப்புக்குள்ளும்** உள்ளே கடவுள் இருக்கிறார் என்றால் **இயேசுகிறிஸ்துவை அறியாதவர்கள்,** இயேசுவை **ஏற்றுக் கொள்ளதவர்களுக்குள்ளும்** கடவுள் இருக்கிறார் என்று தானே அர்த்தம்.

அப்படியானால் இயேசுகிறிஸ்துவின் **பாவமன்னிப்பின் நற்செய்தியை** அவர்களுக்கு நாம் **அறிவிக்கவேண்டிய அவசியம்** இல்லை என்று தானே முடிவுக்கு வரவேண்டும்.

மேலும் பசுமை உடன்படிக்கையில் எழுதப்பட்டுள்ள **ஒன்பதாவது கற்பனையாக** நாம் பூமியின் உரிமைகளுக்காக **போராட வேண்டும்** என்று சொல்லுகிறது.

☐ **கொடைக்கானலில் 2018 மார்ச் 7ம்** தேதி சுற்று சூழல் **லெந்து தியான** செய்தி குறிப்பில் CSI மாடரேட்டர் அவர்கள் குறிப்பிட்டுள்ள மிக தவறான அறிவிப்பு என்னவென்றால் **பூமி உயிருள்ளது-பூமிக்குள்ளும் கடவுள் இருக்கிறார்** என்ற நம்பிக்கையாகும். கத்தோலிக்க தலைவர் போப்புக்கும் அந்த நம்பிக்கை உண்டு. அதனால் தான் எந்த நாட்டுக்கும் போப் அவர்கள் சென்றாலும் அந்த நாட்டு மண்ணில் முட்டியிட்டு **பூமியை வணங்குகிறார். இந்து முன்னியினரும்,** R.S.S.ம் **பூமி தேவி** சிலையை உண்டாக்கி பள்ளிக்கூட பிள்ளைகள் முதல் இந்திய மக்கள் அனைவரும் **பூமிதேவியை வணங்கவேண்டும்** என்று பேசுவதை அறிகிறோம். அப்படியே இவர்கள் யோகா மூலம், **சூரியனையும்** வணங்கவேண்டும் என்கிறார்கள்.

இந்த குறிப்பிட்ட **மாடரேட்டர்மாரும், பிஷப்மாரும்** சேர்ந்து நமது **CSI** சபையின், வேத புத்தகத்தின் **மைய உபதேசத்தையே** பொய்யாக்குகிறார்கள். **தேவனின் சத்தியத்தை மாற்றி சிருஷ்டிகரைத் தொழுதுக்கொள்ளாமல் சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள்.**

**(இயேசுவே) என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் ஆமென்** என்று **ரோமர் 1:25** கூறுகிறது. **இவர்கள் சிருஷ்டியை** தெய்வமாக்கி **CSI** சபைகளை தொழ செய்கிறார்கள்.

## பாலின் சமத்துவம்-GENDER EQUALITY

இது இவர்கள் அறிவிக்கும் மிக ஆபத்தான உபதேசமாகும். இதை நம் தெய்வம் **அருவருக்கிறார்**,தற்போதைய உலக வழக்கப்படி **SEX** என்னும் வார்தைக்கு உடல் கூறு கூறுவதின்படி **ஆண்** அல்லது **பெண்** என்று அர்த்தம்.

**GENDER** என்ற வார்த்தைக்கு விஞ்ஞான உடல்கூறு படிப்பின்படி ஒருவர் தான் ஆணாகவோ பெண்ணாகவோ இருந்தாலும் **உணர்வு பூர்வமாக** நான் என்னை **ஆணாக உணருகிறேனா**? அல்லது **பெண்ணாக உணருகிறேனா**? என்பதை பொருத்து நான் **ஆணும்** இல்லை **பெண்ணும்** இல்லை என்று அடையாளப்படுத்துவேன் என்று பொருள்.

(சரீர ஆப்ரேஷன் எதுவும் செய்ய தேவையில்லை) அதவாவது **SEX** என்பது **சரீரப்பிரகாரமானது** ஆகும். **GENDER** என்பது **உணர்வுபிரகாரமானது** ஆகும்.

**SEXUALITY** என்பது நான் யாரை நோக்கி **ஈர்க்கப்படுகிறேன்** என்பதை பொருத்தது, அதாவது நான் **ஆணை** நோக்கி ஈர்க்கப்படுகிறேனா? என்பதை உணர வேண்டும் அல்லது பெண்ணை நோக்கி ஈர்க்கப்படுகிறேனா? இது இரண்டும் இல்லாமல் **ஆண்** பாலரையும் **பெண்** பாலரையும் **நோக்கி ஈர்க்கப்படுகிறேனா** என்பதை அடிப்படையாக கொண்டதாகும்.

### வேதவசனம் கூறுகிறது :

❖ அவர்களால் **ஒளிப்பிடத்தில்** (மறைவாக) செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் **அலட்சனமாயிருக்கிறதே (எபே. 5:12).**

☐ **CSI SYNOD CHENNAI CENTER**யில் 2017 **ஆகஸ்ட் மாதம் 6ம் தேதி CSIயின் Gender Policy** சம்பந்தமாக ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பகிர்ந்துக்கொள்ளப்பட்ட சில கருத்துக்கள் கீழே வாசிக்கலாம்:

**GENDER EQUALITY BEGINNING WITH THE CHURCH...**

**THE JOURNEY CONTINUES...**

**SEX** என்பது சரீரபிரகாரமானது.

**GENDER** என்பது சமுதாயத்தின் **தாக்கத்தினால்** உருவாக்கப்படுவது. **விஞ்ஞான பூர்வாகமாக** பல்வேரு வகையான **GENDER** கள் உண்டு என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. **CSI** சபையாக நாம் இந்த வகைகளை இன்னும் சரியாக அறிந்து கொள்ளவில்லை. நாம் **ஆண்**பால் - **பெண்**பால் போன்று **இருமைகளை** கடந்தால்தான் **ட்ரான்ஸ் (பாலின வேறுபாட்டை கடந்தவர்கள்)** என்று அழைக்கப்படுவோம். இது சம்பந்தமான சவால்களையும் புரிந்துக்கொள்ள முடியும் என்று இந்த கூட்டங்களில் பேசப்பட்டது.

இவர்கள் இப்படி பேசிய விஷயத்தை கேட்பவர்களுக்கு இவர்கள் பேசியது நியாயமாக, சரியானதாக தோன்றும். ஆனால் **வேதம்** என்ன கற்பிக்கிறது என்பதை கவனியுங்கள்.

- ☐ **தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்**
**அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்.**
**ஆணும்-பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.(ஆதி 1:27)**

**மேலும்...**

☐ **தீமையை நன்மையென்றும் நன்மையைத் தீமையென்றும் சொல்லி, கசப்பை தித்திப்பும்-தித்திப்பைக் கசப்பு என்றும், சாதிக்கிறவர்களுக்கு ஐயோ. ஏசா 5:20.**

CSI மாடரேட்டர் **தாமஸ் K. உம்மன்** அவர்கள் சினாடிலியிருந்து 2018ல் லெந்து கால **தியானஅறிக்கையில்** மேலும் கூறியதாவது. இந்திய CSI திருச்சபை என்பது **தலித்துகள்,** ஆதிவாசிகள், **பெண்கள்**, குழந்தைகள் ஆகிய ஒதுக்கப்பட்டவர்களான இவர்களை உள்ளடக்கியதாகும். ஆனால் இங்கு குறிப்பிட்ட நம்முடைய சபையில் **முக்கிய பொருப்புகளில்** அல்லது **அதிகாரத்தில்** அல்லது சபைகள் எடுக்கும் **தீர்மானங்களில்** இவர்களின் யாரும் இந்த பிரச்சனையில் இடம் பெறவில்லை. இவர்கள் **மேல் சாதியினரால்** ஒதுக்கப்பட்டு இருப்பதால் இந்த பிரச்சனைகள் இன்னும் **போராட்டத்துக்குறியதாகவே** இருக்கிறது. இந்த நிலையில் நம் CSI சபைகளில் பல்வேருவகையான GENDER பாலினம் **அரவாணி,** ஆண்புணர்ச்சிக்காரர்-**பெண்புணர்ச்சிகாரர் போன்றவர்களுக்கு** நம் CSI சபைகளில் **நாம் வெளிப்படையாக** (SEXUAL IDENTITY) **இடம் அளிக்கவில்லை.** ஏழை-பணக்காரன் ஆகிய இவர்களுக்கிடையே காணப்படும் **இடைவெளியை**கூட நாம் இன்னும் குறைக்கவில்லை.

http://csi1947.compastoral_concerns/uploads/resources/documents/lenten_meotation_2018.pdf

- ☐ இதில் நாம் விளங்கிக்கொள்ளவேண்டியது என்னவென்றால் இதுவரை இல்லை மறைவு-காயாக இருந்த வேதத்தில் காணப்படும் **சோதோம்-கொமாராவில்** உருவான பாவங்களை கொண்ட **இயற்கைக்கு மாறான** தவறான **சரீர பால் உறவு** உள்ள நபர்களை நம் CSI சபையில் இவர்கள் **3வது ஜென்டர்** பிரிவினர் என்று வெளியரங்கமாக அறிமுகப்படுத்த வேண்டும் என்கிறார்கள். **உலக** அரங்கத்திலும் **இந்திய** அரசாங்கத்திலும் இப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்க இவர்களை பல விதமான **பதவிகளில்** அமர்த்தப்படுவதைபோல் நம் சபையிலும் **ஆயராக,** சபை கமிட்டியில் பெண்களுக்கான இட ஒதுக்கீடுபோல, 3வது (ஜென்டர்) **பாலினத்தவர்களுக்கும்** சபையில் **ஒதுக்கீடு** அளிக்க வேண்டும். அதை CSI சபை செயல்படுத்தவேண்டும் என்று இந்த கமிட்டி கூறுகிறதாக நாம் அறிய முடிகிறது. இதற்குப் பெயர் Inclusion உள்அடக்குதல் என்ற பெயர்சூட்டி அறிமுகப்படுத்துகிறார்கள்.
- ☐ இப்படிப்பட்ட 3வது பாலினத்தவரைப்பற்றி (3rd Gender) மேலும் சில விவரங்களை நீங்கள் அறிய வேண்டும். https://christiannews.net/2019/01/02/newyork_citys_gender_neutral_birth_certificate_option_into_effect/

## NEWS-1 New York cuty's Gender Neutral Birth Certificate option goes into effect.

**NEWYORK:** மேலே உள்ள ஆங்கில செய்திதாளில் கண்ட செய்தி என்னவென்றால் அமெரிக்காவில் உள்ள **நியுயார்க்** நகரத்தை சேர்ந்தவர்கள் பிறப்பு சான்றிதழில் உள்ள (Birth Certificate) தங்கள் Sex பாலினத்ததை மாற்றிக் கொள்ளலாம் Male & Female ஆண்-பெண் என்று குறிப்பிட விரும்பாதவர்கள் X என்ற குறியிட்டு பாலினத்தை மாற்றிக்கொள்ளலாம்.

**NEWS-2** அமெரிக்காவில் உள்ள **சிக்காகோ** நகரில்உள்ள YMCA ஸ்தாபனம் தங்களை சிறுவர்கள்(ஆண்) சிறுமிகள்(பெண்) ஆகியவர்களுடைய உடை மாற்றும் அறைகளை (Locker Room) 3rd Gender 3வது பாலினத்தவரும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும். அப்படி அந்த தனிப்பட்ட உடை மாற்றும் அறையை 3வது பாலினத்தவரும் உபயோகித்தால் (அது **ஆண்** புணர்ச்சிகாரரோ-**பெண்**புணர்ச்சிகாரரோ பெண்கள் உடைமாற்று அறையை உபயோகித்தால்) என்னென்ன விளைவுகள் ஏற்படலாம் என்பதையும் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளலாம்.

https://Christiannews.net/2016/07/19chicago_ymca_changes_guide_lines_to_allow_boys_to_use_girls_locker_rooms_vice_versa

## இந்தியாவில் நடந்த சம்பவம்

**NEWS-3** ஒரு மெயின் லைன் சபையில் 1/2 பட்டம்பெற்ற பெண் ஆயர் ஒருவர் உதவி ஆயராக அந்த சபைஊழியத்தில் நியமிக்கப்பட்டார். சபைமக்கள் ஆரம்பத்தில் பெண் ஆயர் எங்களுக்கு வேண்டாம் என்றவர்கள். சுமார் 6 மாதங்கள் கழித்து சபை மக்களுக்கு ஆயர் அம்மாவை பிடித்துவிட்டது. அவரின் பிரசங்க செய்த சபைமக்களோடு பழகும் விதம் வீட்டு ஜெபக்கூட்டம் இவைகள் மூலமாக சபைமக்கள் விரும்புகிற பெண் ஆயராக அங்கு பணி செய்தார்.

ஒரு ஞாயிறு காலை ஆராதனை முடிந்த உடன் பெண் ஆயர் **பெண்களின்** கழிவறைக்கு (டாய்லெட்டுக்கு) சென்றார். சற்று நேரத்தில் பாடல் குழுவில் உள்ள வாலிப்பெண்பிள்ளைகள் அந்த கழிவறைக்கு வந்தனர். உள்ளே சென்ற அத்தனை பேரும் குய்யோ முய்யோ என்று கூக்குரலிட்டு வெளியே ஒடி வந்தனர். அவர்களின் சத்தத்தை சபை மக்களும், அந்த ஊர் மக்களும் கேட்டு கூடி விட்டனர். சம்பவம் என்னவென்றால் பெண் ஆயர் அம்மா **அன்று நின்று கொண்டு** சிறுநீர் கழிப்பதை இந்த பெண்பிள்ளைகள் கண்டு சபை மக்களிடம் இது பெண் ஆயர்அல்ல இவர் ஒரு அரவாணி. பிஷப் அவர்கள் இவரை பெண் ஆயர் என்று கூறி நம்மை ஏமாற்றிவிட்டார் என்று கூக்குரலிட்டு ஆயரை அடித்து, ஊர் மக்கள் ஆலயத்தையும், கண்ணடி கதவுகளையும் உடைத்து நொருக்கி வதம் செய்துவிட்டனர். போலீஸ் வந்தது பெண் ஆயரை (அரவாணியை) போலீஸ் பாதுகாப்புடன் கூட்டி சென்றது.

இப்படி ஒரு **3வது பாலினம்** உள்ளவர்களை ஆயராக இதுவரை இந்தியாவில் யாரும் கண்டதில்லை, கேள்விபட்டதும் இல்லை. **பெண் ஆயர்களை** ஏற்றுக்கொள்ளவே தயங்கும் நமது சபை **3வது பாலினமாக** இருப்பவர்களை எப்படி ஏற்றுக்கொள்ளும் !

**கிறிஸ்தவ சபை** என்பது **சமுதாயக்கூட்டம்** அல்ல! **கிறிஸ்து** சபையின் தலையாக இருக்கிறார். கிறிஸ்து நம் கையில் ஆவியானவர் மூலமாக, எழுதிக்கொடுத்த வேத புத்தகம் உண்டு. அதில் **சபைக்கென்று** எழுதப்பட்ட **சட்டதிட்டங்கள்** உண்டு. சபையும் சபை மக்களும், சபை ஆயரும், பாஸ்டரும், பிஷப்பும், மாடரேட்டரும் அந்த வேத புத்தகத்தின் வசனத்தின்படி தான் மக்களை நடத்த வேண்டும்.

உலக மக்கள் போகும் வழியில் கிறிஸ்தவ சபைகளை நடத்திக் கொண்டு போகக்கூடாது. **சபையை கட்டுவேன்** என்று கூறியது **இயேசு கிறிஸ்து.** அந்த கிறிஸ்துவின் சபை **எப்படியிருக்க வேண்டும்!** யாரெல்லாம் **சபையில் இருக்க வேண்டும்**, யார் **இருக்ககூடாது!**

என்பதற்கு வேத வசனத்திலேயே **பதில் இருக்கிறது.** இவைகளை படிப்பிக்கதான் **வேதாகம கல்லூரிகள்** இருக்கிறது. வேதத்தை படித்து நன்கு தேர்ந்தவர்கள் வேதத்தை கற்று சபையின் பாஸ்டராக, ஆயராக, பிஷப்பாக, மாடரேட்டராக, பல பொருப்பில் அமர்ந்து சபை மக்களை உலக மக்களின் பாதையிலிருந்து வேறுப்படுத்தி அவர்களுக்கு **பாவம்** என்றால் என்ன? **பாவ மன்னிப்பு** பெறாமல் பரலோகசெல்ல முடியாது என்பதை கூறி சபைமக்களை செவ்வை படுத்தத்தான் **சபைகளின் பொருப்பை** மேலே குறிப்பிட்ட தலைவர்களின் கையில் கொடுக்கப்பட்டது.

ஆனால் இவர்களே கர்த்தர் வெறுக்கும் **சோதோம் கொமாராவின்** பாவங்களை சபைக்குள் கொண்டுவர முயலுவார்களேயானால் இப்படிப்பட்டவர்களை யார் சபையிலிருந்து (Ex-comunicate) விலக்கி வைப்பது.

நம் சபைகள் குறிப்பாக நம் CSI சபைகள் இப்படிப்பட்ட **தவறான தலைமையின்** கீழ் அகப்பட்டு சீரழிவதை தடுப்பார் யார்? இவர்கள் செய்வது அல்லது சபையில் அறிமுகப்படுத்தும், மேலே வாசித்த இவர்களின் செயல்கள் **கண்டிக்கத்தக்கது** தண்டிக்க தக்கது என்று யார் இவர்களுக்கு உணர்த்துவது?

☐ **சுற்றசூழல் பாதுகாக்க**ப்பட வேண்டியது மிக மிக அவசியம். முழு உலகமே **சுற்றுசூழல் மாசுப்பட்டதால்** ஏற்பட்ட அழிவையும் இனி அதனால் ஏற்பட போகிற ஆபத்தையும் அறிந்து முழு உலகமும் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்து கொண்டு வருகிறது. உலக மக்களுக்கு மீடியா மூலமாக இதை குறித்து விழிப்புணர்வு ஏற்பாட்டை நடத்திக் கொண்டுயிருக்கிறது.

**கிறிஸ்தவ சபைகளும்** தன் சார்பாக குறிப்பாக CSI சபைகளும் தங்கள் சபைகளில் இவைகளைக்குறித்து விழிப்புணர்வை உண்டாக்கவேண்டும் என்பதில் எழுதுகிற எனக்கோ, வேரு யாருக்கும் மாற்று கருத்து இல்லை. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிக அவசியம் மட்டுமல்ல, மிக அவசரமாக அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியமே.

ஆனால் கிறிஸ்துவின் சரீரமாகிய **கிறிஸ்தவ சபையின்** விசுவாச வழியில், விசுவாச உடன்படிக்கையில் ஒன்றாக **சுற்றுச்சூழல் பாதுகாப்பு** விஷயத்தை கலக்க கூடாது, கலக்கவும் முடியாது. அது **சமூக சேவை - இது கிறிஸ்தவ வாழ்க்கை.**

**பூமியில்** கடவுள் இருக்கிறார்**, மரம் செடி கொடிகளிகலில்** கடவுள் இருக்கிறார் **சகல சிருஷ்டியிலும்** கடவுள் இருக்கிறார். இவைகள் யாவும் தொழுதுக்கொள்ளப்பட வேண்டியவை என்ற அந்திகிறிஸ்துவின் வஞ்ஜகமான போதனையை CSI சபைகளில் நுழைக்க சபை தலைவர்கள் தங்களை பிசாசுக்கு விற்றுப்போட்டார்களே! இவர்களின் இந்த செயல் மிகவும் வேதனையாகவும் ! பயமாகவும்! இருக்கிறது.

## GENDER EQUALITY பாலின சமத்துவம்

மேலே குறிப்பிட்ட **சுற்றுசூழல் பாதுகாப்பை** கிறிஸ்தவ சபையின் விசுவாச கட்டளைகளில் ஒன்றாக சேர்க்கப்பட வேண்டும் என்று CSI மாடரேட்டர் அவர்கள் எழுதிய கட்டளைகளோடு **பாலின சமத்துவம்** என்ற பெயரில் **3வது பாலினத்தவரை** CSI சபைக்குள் வெளிப்படையாக சபைமக்கள் அடையாளம் காணப்படதக்கதாக சபை ஆண்கள் சபை பெண்கள் இவர்களோடு CSI சபையின் 3வது பாலின சபை அங்கத்தினர்களாக்க இணைக்க வேண்டும் என்று கிறிஸ்தவ விசுவாச சட்டத்தோடு இவைகளை இணைக்க முற்படும் இவர்களை என்னவென்று அழைப்பது?

## வேதம் சொல்வதை கவனியுங்கள்.

**தேவனை அறியும் அறிவைப்பற்றி கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்த படியால் தகாதவைகளைச் செய்யும்படி தேவன்** அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார் ரோ:1:28

- ☐ அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படு முன்னே அதுவெளிபடாது. நீக்கப்படும் போது அந்த **அக்கிரமகாரன் வெளிப்படுவான்** அவனை தன் வாயின் சுவாசத்தினாலே அழித்து தம்முடைய வருகையின் வருகையின் நாட்களில் நாசம் பண்ணுவார். 2 தெச 2:7-8.
- ☐ இயேசுவை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான், இயேசுவை **விசுவாசியாதவனோ** தேவனுடைய ஒரே பேரான குமாரனுடைய நாமத்தில் விசுவாச முள்ளவனாகயிராதபடியினால் அவன் ஆக்கினைத் தீப்புக்குப்பட்டாயிற்று. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷனுடைய **கிரியைகள் பொல்லாதவைகளா யிருக்கிறபடியால்** அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்கு காரணமாயிருக்கிறது பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியை பகைக்கிறான் தன் கிரியை கண்டிக்காதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான் சத்தியத்தின்படி செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான் என்றார். (யோவான் 3:16-21).
- ☐ அவர்களுடைய பெண்கள் அநுபோகத்தைச் (Natural use of their sex by un Natural Acts) சுபாவத்துக்கு விரோதமான **(பெண்ணோடே-பெண்)** அநுபோகமாக மாற்றினார்கள் அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவபடி அனுபவியாமல்...**ஆணோடே+ஆண்** அவலட்சணமானதை நடப்பித்து தங்கள் தப்பிதத்துக்குத் தகுதியான பலனை தங்களுக்குள் அடைந்தார்கள்.

தேவனை அறியும் அறிவைக்கொண்டிருக்கிற அறிவைப்பற்றி அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால் தகாதவைகளை செய்யும்படி தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார்.

தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும் அவைகளைத்தாங்களே செய்கிறதுமல்லாமல் **செய்கிற அவைகளை மற்றவர்களிடத்தில்** பிரியப்படுகிறவர் களுமாயிருக்கிறார்கள் ரோமர் 1:26-32.

மேலே வாசித்த வேத வசனங்களில் குறிப்பிட்ட பாவ செயல்களுக்குதான் **3வது பாலினம்** 3rd Gender என்று ஒரு பெயர் வைத்து பாவத்தை நியாயப்படுத்துகிறார்கள். அதை **மனித உரிமை** என்று சுப்ரீம் கோர்ட்டும் தீர்ப்பளித்துவிட்டது.

- ☐ 3rd Gender செயல்கள் யாவும் சிறுவயதிலேயே காணப்படும். **ஹார்மோன் மாற்றங்களினால்** சரித்தில் உருமாரும்போதே **டாக்டரிடம்** பெற்றோர் பிள்ளைகளை கொண்டு சென்றால் **ஹார்மோன்** சம்பந்தமான மருந்துகளை உட்கொண்டு ஆரம்பத்திலேயே அவர்களின் இயற்க்கைக்கு மாறான உணர்வுகளை சரி பண்ணி அவர்களை நம்மைபோல் வாழ வைத்திருக்கலாம்.

எப்படியோ முற்றிவிட்ட நிலையில் 3வது **பாலினத்தரை** கர்த்தர் **வெருக்கவில்லை.** நாமும் அவர்களை **வெருக்காமல்** அவர்களை வாழ வைப்போம். இப்படிப்பட்டவர்கள் தன் **தவறான உறவுகளை** நிறுத்தி **மனம்திரும்பினால்** இவர்களுக்கும் பரலோகம் நிச்சயமாக உண்டு. கர்த்தர் யாரையும் வெறுப்பதில்லை.

**துன்மார்க்கன் துன்மார்கத்தில் சாகாமல் மனம் திரும்பி பிழைப்பதையே கர்த்தர் விரும்பகிறார். (எசே 18:23 33:11)**

இப்படிப்பட்ட 3rd Genderகளுக்கு தமிழ்நாட்டில் **ஆரணி** CSI சபையிலும், **வெல்லூர்** CSI சபையிலும் இவர்களுக்காக இவர்கள் மத்தியில் நான் சுவிசேஷம் அறிவித்தேன். இயேசுவிடம் யாவருக்கும் **பாவ மன்னிப்பு உண்டு.**

- ☐ நம் CSI சபை மாடரேட்டரும், பிஷப்மாரும், ஆயர்களும், சபை மக்களும் செய்ய வேண்டியதென்னவென்றால் **முற்றிப்போன** சரிப்படுத்த இயலாத அல்லது **தன்னை மாற்றிக்கொள்ள** முடியாத **3வது பாலினத்தவருக்கு** அரசாங்கம் பலவிதத்தில் உதவுவதை போல CSI, **சபையாக** இவர்களை தேடிசென்று இவர்கள் **சுயதொழில்** செய்ய உதவுவது நல்லது.

நம்முடைய சபையில் உள்ள **பிள்ளைகள்** 3வது **பாலின உணர்ச்சியில்** விழுந்துவிடாமல் இருக்க சபைமக்களுக்கும் சபையில் உள்ள **பெண்பிள்ளைகளுக்கு - ஆண்பிள்ளைகளுக்கு** ஆவிக்குறிய **ஆலோசனை** (Counceling) கொடுக்கவும் அவர்களுக்கு கவுன்சிலிங் மூலம் **விழிப்புணர்வு** உண்டாக்கவும் ஏற்பாடு செய்வதுதான் ஞானம்.



**இரண்டு பெண்களின் திருமணத்தை (Lesbian) ஆயர் செய்து வைக்கிறார்**

இந்த ஆலோசனையின்படி செய்யாமல் 3rd Gender நபர்களை சபையில் வலுக்கட்டாயமாக இணைத்து கொண்டார்களேயானால் CSI **சபைக்குள்** பெரும் **பாவ விபரிதங்கள்** ஏற்படும். அப்படி நடவடிக்கை எடுக்காமல் போனால் ஒவ்வொரு CSI சபையும் சோதோம்-கொம்மாராவாக மாறும்.

ஒரு பெண்ணை-மற்றொரு **பெண்ணுக்கு** அல்லது ஒரு ஆணை-மற்றொரு **ஆணுக்கு** சபை **ஆயரோ, மாடரேட்டரோ** தாலி எடுத்து கொடுத்து மேலே படத்தில் காண்பது போல் சபையில் **விவாக ஆராதனை** நடத்தி வைக்கும் **அவலட்சனங்கள்** அரங்கேறும். படத்தில் காணும் ஆயர் ஸ்தானத்தில் **மாடரேட்டர்** படத்தை வைத்து அல்லது **பிஷப், ஆயர்** படத்தை பொருத்தி கற்பனை செய்துபாருங்கள்.

வேண்டாம் இந்த விபரீத உடன்படிக்கை விளையாட்டு **ஆன்மீகம்** இல்லாத W.C.C. கட்டளையிடுவதை கைக்கொண்டால் CSI மாடரேட்டர், பிஷப்மார் அவர்களும் பாவத்துக்கு துணை நிற்கிறார்கள் என்று அர்த்தமாகும். **தேவ கோபம்** இப்படிப்பட்டவர்கள் மேல் நிச்சயம் உண்டாகும்.

குறிப்பு: மேலே வாசித்த CSI மாடரேட்டர் Most. Rev.Thomas K.Oomman அவர்கள் **லெந்து காலதியான** ஜெப அறிக்கையில் மற்ற 3வது **பாலின** அறிக்கை எதுவும் இதுவரை எந்த CSI சபையிலும் நடைமுறைப்படுத்தவில்லை.

இவைகளைக் குறித்து ஒவ்வொரு CSI டையோசிஸ்ஸிலும், ஒவ்வொரு CSI சபைகளிலும் ஆயர்கள் கூட்டங்கள் நடத்தி இவைகளைக்குறித்து விவாதித்து சபைமக்கள், ஆயர்களின் அபிப்ராயத்தை தீர்மானங்களின் விவரங்களை CSI சினாடுக்கும் மாடரேட்டர் அவர்களுக்கும் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மாடரேட்டர் அவர்கள் பிஷப்பாக பணியாற்றும் மத்திய கேரளா டையோசிஸ்ஸில் பெரும் பாலான ஆயர்களும் சபைமக்களும் குறிப்பிட்ட இரண்டு விஷயங்களையும் பயங்கரமாக எதிர்க்கிறார்கள், வெறுக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

1. **சுற்றுசூழல் பாதுகாப்பு** கட்டளைகளை 2. Gender Equality **3வது பாலின சமத்துவம்** (சோதோம்-கொமோரா பாவங்களில் அகப்பட்வர்களை **மனித உரிமை** அல்லர் **மனித நேயம்** என்ற பெயரில் கிறிஸ்தவ விசுவாச கட்டளைகளோடு எந்த காரணம் கொண்டு உடன்படிக்கை செய்யக்கூடாது கிறிஸ்தவ விசுவாசத்துடன் இணைக்கவும் கூடாது.

1999ல் CSI சினாட் கூட்டத்தில் பிஷப்மார்-ஆயர்கள் யாவரும் இயேசுவே நீரே சிவன், நீரே அல்லா, நீரே புத்தன் என்ற சமத்துவ கொள்கையான எல்லா மதமும் ஒன்று, எல்லா தெய்வமும் ஒன்று என்ற கொள்கையை பகிரங்கமாக ஜெபித்து அரங்கேற்றியபோது அனைத்து CSI சபை மக்களும் ஆயர்களும் தங்கள் எதிர்பையும் வெருப்பையும காட்டியதால் CSI அந்தி கிறிஸ்துவின் முதல் திட்டத்திலிருந்து காப்பாற்றப்பட்டது.

அதைப் போலவே

சுற்றுசூழல் பாதுகாப்பு-3வது பாலின சமத்துவம் என்ற பாவத்தையும் ஆரம்பத்திலேயே நம் **எதிர்ப்பை-வெருப்பை** நமது மாடரேட்டரும் பிஷப்மாருக்கும் CSI சினாடுக்கும் அறிவிக்க வேண்டியது மிக அவசியம். நாம் இவைகளை இப்போதே எதிர்காமல்போனால் நம் சந்ததி நம்மை மௌனத்தை கண்டு வெட்கப்படும்.

குறிப்பு: இதை வாசிக்கும் வாசகர்களுக்கும் என் ஊழியத்தை இத்தனை வருடமாக தாங்கி ஆதரித்த என் ஜாமக்காரன் குடும்பத்துக்கும் நான் அறிவிப்பது என்னவென்றால் நான் இப்படி எழுதுவதால் என்னை **CSIயிலிருந்து வெளியேற்றும் நாள் நெருங்கிவிட்டது** என்று நினைக்க தோன்றுகிறது. ஜெபியுங்கள்: நானும் ஜெபிக்கிறேன்.

**"என் தேவனே நான் என் தேவனுடைய ஆலயத்ததுக்காகவும், அதன் முறைமைகளுக்காகவும் செய்த நற்கிரியைகளைக் குலைத்துபோடாமல் இந்த காரியத்திலே என்னையும் (என் சபைகளையும்) நினைத்தருளும்". நெகே.13:14.**

# CSI மதுரை - இராமநாதபுரம் டையோசிஸ்
# அபிஷேக நாதர் CSI ஆலய கண்வென்ஷன்(இளம்தோப்பு)



2019 வருடத்தின் முதல் கண்வென்ஷன் கூட்டம் மதுரை CSI திருமடைலத்தில் (இளம் தோப்பு) CSI ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு நான் மூன்றாம் முறையாக பேச அழைக்கப்பட்டிருந்தேன். கூட்டம் மிகவும் ஆசிர்வாதமாக நடந்தெரியது. ஞாயிறு காலை இரண்டு ஆராதனைகளை ஒன்றாக்கி வசனத்தை கேட்க தலைமை ஆயரோடு சபைமக்களும் வாஞ்சை உள்ளவராக இருந்ததை அறிந்து துதிக்கிறேன். சாதாரணமாக காலை ஆராதனையில் அதுவும் வருடத்தின் முதல் ஞாயிறு திருவிருந்து ஆராதனையில் 1/2 மணிநேரம் அல்லது 40 நிமிடத்துக்கு மேல் நான் பிரசங்கிக்க மாட்டேன். சபை தலைமை ஆயருடன் உதவி ஆயர் சபை கமிட்டி யாவரும் என்னை நீண்ட நேரம் பேச உற்சாகபடுத்தியதால் 1மணி 40நிமிடங்கள் கர்த்தருடைய செய்திகளை பகிர்ந்துக் கொண்டேன். அவர்கள் உள்ளத்தின் ஆவலை அறிந்த தேவன் அவர்களின் தேவைக்கேற்ப ஆவியானவர் மூலமாக என்னை கருவியாக்கி பேசவைத்ததார். அந்த செய்திக்ள என்னையும் சபை மக்களையும் திலதியாக்கியது. அந்த செய்தி மூலமாக உணர்ந்தபட்டவர்கள் ஆறுதல் பெற்றவர் அநேகர்கள். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.



தலைமை ஆயர் REV.D.DEVA IRAKKAM, உதவி ஆயர் மேலும் Rev. R.Samuel இவர்களோடு சபை நிர்வாகிகள் மிக நல்ல ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். நிறைய ஆத்ததுமாக்கள் இரட்சிக்கப்பட்டர்கள்.

☐ படத்தில் காணும் சிறுவன் பெயர் **பிரவின்** 4ம் வகுப்பு படிக்கும் இந்த சிறுவன் நம் CSI சபையின் முழு சபை மக்களையும் கீ-போர்ட் வாசித்து பாடலில் வழி நடத்துவது எனக்கு பெரும் ஆச்சரியத்தை அளித்தது. இதில் விசேஷம் என்னவென்றால் நோட்ஸ் வாசிக்க தெரியாது முறைப்படி நோட்ஸ் வைத்து கிபோர்ட் வாசித்து பழகவில்லை.

காதில் கேட்டும் பாடலின் ராகத்தை மனதில் ஞானப்பாட்டு கீர்த்தனை பாடல்களை சபை மக்களின் ஸ்ருதியை கண்டுபிடித்து பாடல்களை துடங்க சபைமக்கள் பாடி முடிக்கிறார்கள்.

கீபோர்டை கூட பார்க்காமல் நிமிந்து சபைமக்களின் வாயசையை பார்த்தவாரே அற்புதமாக வாசிக்கும் இந்த சிறுவனை படம் பிடித்தேன். இது சாதாரண தாலந்து அல்ல. இந்த சிறுவயதில் இப்படிப்பட்ட தாலந்து பெற்ற இவனின் தகப்பனார் மதுரை CSI சபையின் கிளை சபை ஊழியரின் மகனாகும்.

சபை தலைமை ஆயரும் சபையில் உள்ள நிர்வாகிகளும் சிறுவன் என்றோ-கிளை சபை ஊழியனின் மகன் என்றோ அலட்சியப்படுத்தாமல் சிறுவனை உற்சாகப்படுத்தி தொடர்ந்து கீ-போர்ட் வாசிக்க அனுமதித்ததை அறிந்து சபையில் உள்ள அனைவரையும் வாழ்த்துகின்றனர்.

- சேலத்தில் உள்ள நான்கு CSI சபைகளில் ஒன்று CHRIST CHURCH ஒரு காலத்தில் அது SPG சர்ச் என்றும் வெள்ளைகார கலெக்டர் உயர் அதிகாரிகள் பங்கெடுக்கும் ஆலயம் என்று பெயர் பெற்றது. நான் சிறுவனாக இருக்கும்போதே இந்த ஆலயத்தின் ஆர்கன் சிறப்பானது என்று கூறுவார்கள். அனேக ஆண்டுகளாக ஒரு குறிப்பிட்ட நபர் மட்டுமே அந்த **ஆர்கன்** என்ற கருவியை பயன்படுத்தமுடியும், அவருக்கு பின் சகோதரி Flora என்ற பட்டதாரி சகோதரி அந்த **ஆர்கன்** கருவியை வாசித்து ஆங்கில ஆராதனை, தமிழ் ஆராதனைகளுக்கு பாடல் வாசித்து உதவி வந்தார். இப்போது ஒரு இஞ்ஜினியர் Mr.John Jeyagar என்பவர் பிரதான பாடல் குழுதலைவர். கல்லூரி மாணவராக இருக்கும்போது முழுஇரவு ஜெபம், என்னுடைய ஆவிக்குறிய கூட்டங்களுக்கு நான் பாடும் பாடலுக்கு கிட்டார் வாசித்து உதவுவார்.

என் பேரபிள்ளைகளும் இவரிடத்தில் இசைகருவி வாசிக்க டியுஷன் பயின்றார்கள்.

இப்போது இவர் சிறுமிகளுக்கு சிறுவர்களுக்கு, வாலிபர்களுக்கு CSI சபை ஆராதனையில் ஆர்கன் வாசிக்கவும் சிட்டார் வாசிக்கவும் ஊக்குவிக்கிறார். தான் வாசிப்பதை நிறுத்தி சிறுவர்களை சபையில் ஆர்கன் வாசித்து சபையை பாடலில் வழிநடத்துகிறார். பிசிறு இல்லாமல் இசை கருவிகள் வாசிக்க நல்ல பயிற்சி கொடுத்து சபை பிள்ளைகளை ஊக்குவிக்கிறார். ஒரு கமிட்டியில் மட்டும் பொறாமை காரணமாக சிறுபிள்ளைகளை சபையில் வாசிக்க அனுமதிக்க கூடாது என்று எதிர்த்தனர். ஆனால் சபையின் ஆயர், சபையில் உள் சில முக்கியஸ்தர்களின் முயற்சியால் இப்போது தொடர்ந்து பயிற்சிபெற்ற சிறுவர் சிறுமிகள் ஆர்கன், கிட்டார் வாசிக்க அந்த சபையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் சபையில் தாலந்து பெற்றவர்கள் ஏராளம் உண்டு சபைக்காக ஆண்டவர் மகிமைக்காக அவர்களை சபை ஊக்குவிக்கவேண்டும். தாலந்து உபயோகிக்கப்பட வேண்டும் என்று மத் 25:24 இயேசு கூறியிருக்கிறார்.

# வாசகர் கடிதம்

## YEMEN நாட்டு கிறிஸ்தவர்களின் பிரச்சனை

கடந்த வருடம் **ஏமன்** என்ற அரபு நாட்டில் இரண்டு நபர்கள்

1) சகோ JOSE கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்தவர். மற்றவர் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்தவர். இவர்கள் இருவரும் முஸ்லீம் மதத்தில் சேர்ந்துவிட்டதாகவும், முஸ்லீம் மத குருமார்களுடன் சேர்ந்து கிறிஸ்தவ சபைகளை தாக்குவதாகவும், ஜாமக்காரனில் வாசித்தோம். அப்படிப்பட்ட செய்திகள் ஏமன் நாட்டிலும் சிலர் வேண்டுமென்றே பரப்பிவருகிறார்கள். முன்பே நாங்கள் அதை அறிந்தோம். நாங்கள் உங்கள் பத்திரிகையின் தீவிர வாசகர்கள் ஆகும். நீங்கள் இந்த நாட்டில் வந்து பிரசங்கித்தபோது நாங்களும் உங்களை நேரில் சந்தித்தோம்.

Uncle அந்த குறிப்பிட்ட செய்தி தவறானது. சகோ. JOSE பற்றி எங்களுக்கு நன்றாக தெரியும். மற்ற நபருடன் நாங்கள் அத்தனை நெருக்கம் இல்லை. சகோ. ஜோஸ் இப்போது எங்கள் ஜெப குழுவில் வந்து கலந்துகொள்கிறார். மற்ற தூத்துக்குடியை சேர்ந்த சகோதரரும் **முஸ்லீமாக** மாறவில்லை. ஆனால் இந்த குறிப்பிட்ட சகோதரர் கொஞ்ஜ காலம் ஆவிக்குரிய ஐக்கியங்களில் பங்குகொள்வதை நாங்கள் பாரக்கவில்லை.

இப்படி பொய்யான தகவல்களை வெளியிட்டவர்களை ஓரளவு நாங்கள் அறிவோம். அவர்கள் ஒரு முறை விடுமுறையில் இந்தியா போய் திரும்பினார். உடனே தன்னை Rev. என்று தன் பெயருக்கு முன் இட்டுக்கொண்டார். இவர் எப்படி Rev. ஆனார். எந்த வேதாகம கல்லூரியில் பயின்றார். இவருக்கு Rev. என்று யார் ஆடிநேஷன் கொடுத்தது என்பது யாருக்கும் தெரியாது.

இவர் நன்றாக ஜெப கூட்டங்களை நடத்திக்கொண்டுதான் இருந்தார். ஆனால் இவருடைய ஐக்கியத்துக்கு வராதவர்கள்மேல் இவர்கோபம்கொண்டு அந்த நபர்களின்மேல் வேண்டாத புரளிகளை கசியவிடுவதாக அறிந்தோம். இவருக்கு ஏமன் அரசாங்கத்தில் அலுவலகத்தில் கொஞ்ஜம் செல்வாக்கு உண்டு. அதை வைத்து பலரை பயமுறுத்தவும் செய்ததாக சிலர் எங்களிடம் கூற கேட்டோம்.

ஆகவே அந்த நபரோ அல்லது வேறு யாரோ அவருக்கு வேண்டியவர்கள் சென்னையில் இருக்கும் நபருக்கும் உங்களுக்கும் ஜெப குறிப்பாக தனக்கு கீழ்படியாதவர்களின் பெயர்களை எழுதி அனுப்பி அவர்கள் பெயரை கெடுக்க முயலுகிறார். என்று எண்ணுகிறோம். அதை நீங்கள் நம்ப வேண்டாம். நீங்கள் தொலைபேசி மூலம் **ஏமன் நாட்டில்** ஜாமக்காரன் வாசனர் சிலரிடம் குறிப்பிட்ட நபர்களைப்பற்றி விசாரித்ததாக நாங்கள் அறிந்தோம். அவர்கள் நிச்சயம் உண்மையை கூறியிருப்பார்கள் என்று நினைக்கிறோம்.

**ஏமன் அரசாங்கம்** கிறிஸ்தவர்களுக்கு **எந்த தடைகளும்** செய்வதில்லை. நாங்கள் சுதந்திரமாக ஜெப கூட்டங்களில் பங்கு கொண்டு பல குழுக்களாக சேர்ந்து இங்கு ஆராதிக்கிறோம்.

**ஏமனில்** உள்ள உங்கள் **மலையாள நண்பர்** மலையாள வாசகரிடமும் இந்த விவரத்தை நாங்கள் கூறி உங்களுக்கு உண்மைய அறிவிக்க சொன்னோம்.

பழைய ஜெப ஐக்கியம் பிளவுபட்டது உண்மைதான். வாக்குவாதங்கள் ஏற்பட்டதும் உண்மை. அரசாங்கத்தின் கவனத்துக்கும் கிறிஸ்தவர்களிடையே உண்டான சண்டை விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. என்பதும் உண்மை. ஆனால் **கிறிஸ்தவர்** யாரும் **முஸ்லீமாக** மாறவில்லை. யாரும் எந்த ஜெப கூட்டத்தையும் வெளிப்படையாக தாக்கவில்லை.

உங்களுக்காக ஜெபிக்கிறோம். இப்படிக்கு..................................................

# துன்பப்பட வேண்டியது அவசியம். 1 பேதுரு 1:6

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்கியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். 2 தீமோ 3:12

**புதுவருடத்தில்** ஆசீர்வாதம் **செழிப்பு உபதேசம்** எதிர்பார்த்த வாசகர்களுக்கு - இந்த செய்தி அதிர்ச்சியும் **அபசகுணமாகவும்** தெரியும். ஆனால் **வேதவசனத்தின்படி** வாழ ஆசைப்படுபவர் களுக்கு **இது ஆசீர்வாத** செய்தியாகவும் ஆறுதலாகவும் தோன்றும்.

கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையில் நம்மெல்லாருக்கும் தேவ கிருபை சமாதானம். சகாயம். சந்தோஷம், வேத வெளிச்சம், ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் இவ்வாறு பல காரியங்கள் நமக்கு அவசியம் தேவைதான். கர்த்தரிடம் நாம் கேட்கும்போது அவைகளை நமக்கு அருளுகிறார். ஆனால் இவைகள் மட்டுமல்ல, இவைகளோடு விசுவாசிகளான நமக்கு **துன்பப்பட வேண்டியதும்** அவசியமாதலால் அதை **நாம் கேட்காமலே** கர்த்தர் கொடுக்கிறார். "ஏனெனில் **கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரம் அல்ல.** அவர் நிமித்தமாகப் **பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது"** (பிலி. 1:29) என்று வேதம் கூறும் ஆலோசனையையும் நாம் விசுவாசிக்கிறோம்.

**இதன் பொருள் என்ன?** கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்துக்கேட்கும்போது அவர் **அநேக நன்மைகளைக்** கொடுக்கிறார் என்பது மட்டுமல்ல அவைகளுடன் சேர்த்து **பாடுகளையும்,** துன்பங்களையும் கர்த்தர் அவசியம் நமக்கு அருளுகிறார் என்பதாகும். " அன்றியும் **கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்"** (2 தீமோ .3:12) என்று வாசிக்கிறோம். ஆகவே விசுவாச வாழ்வில் **துன்பம்,** துக்கம், **பலவித சோதனைகள்,** உபத்திரவங்கள், **பாடுகள்** அனுபவிக்க வேண்டியது அவசியம் என்பதை அறிய வேண்டும். இந்த தேவ இரகசியத்தின் அர்த்தத்தை நாம் விளங்கிக்கொண்டால் துன்பத்தின் அல்லது வியாதியின் நடுவிலும் நாம் ஆவிக்குறிய சமாதானத்துடன் **ஸ்தோத்திர பாட்டை பாட முடியும். முறுமுறுக்க மாட்டோம்.**

**ஏன் துன்பப்பட வேண்டியது அவசியம்?** "அழிந்துபோகிற பொன் **அக்கினியினாலே** சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற **உங்கள் விசுவாசமும்** சோதிக்கப்பட்டு.... உங்களுக்குப் புகழ்ச்சியும். கனமும் மகிமையுமுன்டாகக் காணப்படும் என்று 1 பேதுரு 1:7ல் வாசிக்கிறோம். எனவே விசுவாசிகளாகிய நமது விசுவாச வாழ்வில் பல சோதனைகளையும். துன்பங்களையும் அனுபவிக்க வேண்டியது அவசியமாகும் என்பதைக் கற்றுக்கொள்கிறோம்.

ஆனால் **துன்பப்படுவதால் என்ன நன்மை** கிடைக்கிறது என்பதை அறியும்போது சோர்ந்து போகாமல் ஆவிக்குரிய பெலனும், எழுப்புதலும் பெற்று வாழ முடியும். எனவே துன்பப்படுவதால் என்ன நன்மை கிடைக்கும் என்பதை அறிவோமா?

**1) பரலோகத்தில் மிகுதியான பலன் கிடைக்கும் :** மத்தேயு 5:10-12

நீதியினிமித்தம் (கர்த்தரின் நாமத்தினிமித்தம்) **துன்பப்படுகிறவர்கள்** பாக்கியவான்கள். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். **பரலோக ராஜ்யம் அவர்களுடையது.** அது மட்டுமல்லாமல் **பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.** ஆம். தேவ பிள்ளைகளே. நம் வாழ்வில் பலதுன்பங்களை **கிறிஸ்துவினிமித்தம்** நாம் அனுபவிக்கும்போது **உலகப்பிரகாரமாக பலன்கள்**

ஒன்றுமில்லாவிடினும், **பரலோகத்தில் மிகுந்த பலன் உண்டு.** அவைகள் நாம் நித்திய காலமாக **நாம் அனுபவிக்கக்கூடிய பலன்கள்.** அழிவற்ற பலன்கள் ஆகும். எனவே மிகுந்த பலனுக்கேதுவான நம் விசுவாசத்தை எத்தனை துன்பங்கள் வந்தாலும் விடாதிருப்போம்.

### 2) தேவ கிருபையை பெற முடியும் : 2 கொரிந்தியர் 12:7-10

அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையில் அவரது சரீரத்திலே எப்போதும் **துன்பத்தையும், வேதனையையும்** தரக்கூடிய **ஒருமுள்** கொடுக்கப்பட்டிருந்தது. அதைக்குறித்த அது **என்னைக் குட்டும் சாத்தானின் தூதன்** என்று அவரே கூறினார். மட்டுமல்ல மற்றவர்கள் ஆரோசிக்கும் அளவிற்கு அருவருக்குமளவிற்கு அந்த முள் அவரது சரீரத்தில் வருடக்கணக்கில் நீங்காத **வேதனையையும் துன்பத்தையும்** கொடுத்துக்கொண்டிருந்தது. (கலா. 4:14) ஆனால் **அந்தக் துன்பம் நீங்கும்படி கர்த்தரிடம் மூன்று தரம் விண்ணப்பம் செய்தார்.** ஆனால் கர்த்தரோ **அந்தத் துன்பம் தரும் முள்ளை நீக்காமல்** என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே துன்பத்தின் நடுவிலேயே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.

ஆம் பவுல் தன் வாழ்வில் நீங்கா துன்பம் தரும் முள்ளைப்பெற்றிருந்த படியினாலே போதுமான **தேவகிருபையும்** பூரணமாகத் **தேவ பலத்தையும்** பெற்று அனுபவித்தார். எனவே தான் 2 கொரி 12:10ல் **கிறிஸ்துவினிமித்தம்** (கிறிஸ்துவுக்காக சாட்சியாக வாழ அனுபவிக்கும் துன்பத்தினிமித்தம்) எனக்கு வரும் **பலவீனங்களிலும் நான் பிரியப்படுகிறேன்** என்று கூறுகிறார். அதில் பவுல் ஆத்மீக இன்பம் அனுபவிக்கிறார். நம் வாழ்விலும பவுலுக்கு இருந்ததுபோல **பலவித துன்பங்கள்,**வேதனைகள், **நீங்காத வியாதிகள்** இருந்தாலும். **அவைகள் நீங்கும்படி ஜெபித்தும்** கர்த்தர் நாம் **அவைகளை அனுபவிக்கும்படி அனுமதித்திருப்பின்** நாம் சோர்ந்துபோக வேண்டாம். தேவனுடைய மாறாத **போதுமான கிருபை** நம்மிடத்திலல் பெருகும் அவரது **பூரண பலம்** நம்மைத் தாங்கும். தேவ **கிருபையையும்** பூரண **பலத்தையும்** நாம் அனுபவிக்கலாம். எனவே பவுலைப்போல **துன்பங்களில் பிரியப்படுவோமாக.**

நாம் ஆராதிக்கும் கர்த்தராகிய இயேசுவை நாம சரியாக விளங்கிக்கொண்டால்தான் பவுலின் அனுபவம் நமக்கு உண்டாகும்.

### 3) தேவனுடைய கண்கள் நம்மைப் (பார்க்க செய்ய முடியும்) பார்க்கிறது. சங் 33:19

**"பஞ்சத்தில்** அவர்களை **உயிரோடே காக்க, கர்த்தருடைய கண்கள்** அவர்கள்மேல் நோக்கமாய் இருக்கிறது." தேவ பிள்ளைகள் வாழ்க்கையிலே **பஞ்சம், பசி, வறுமை** எல்லாம் வருமா? **வரும்.** உலகம் முழுவதும் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்படும்போது அந்தப் பாதிப்பு தேவ பிள்ளைகளாகிய நம்மையும் பாதிக்கும். இக்காலத்தில் **பொருளாதார நெருக்கடி,** வேலையின்மை, விலைவாசி உயர்வு இதிநிமித்தம் பல துன்பங்கள் உலகத்தில் ஏற்பட்டிருக்கிறது. இது **விசுவாசிகளாகிய நம்மையும் பாதித்திருக்கிறது.** ஆனால் ஒன்று நிச்சயம். அவரது பிள்ளைகளாகிய நம் மீது **அவரது கண் விசேஷித்த நிலையில் நோக்கமாயிருக்கிறது,** அது நம்மைக் காக்கிறது. ஒரு பெற்றோர் தங்கள் பிள்ளைகளில் யாரேனும் ஒருவருக்கு **நோய் வரும்போது.** அந்த நோயுற்ற மகன்மேல் விசேஷித்த கவனம் வைத்து. சிறப்பாக கவனிப்பார்கள். மற்ற பிள்ளைகளையும் நாம் கவனித்தாலும் அந்த **நோயுற்ற மகனுக்கு** அந்த கால கட்டத்தில் பெற்றோரின் **விசேஷித்த கவனிப்பு கிடைக்கிறது.** இது போலவே நம் வாழ்விலும் பஞ்சம் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், **பொருளாதார நெருக்கடி** போன்ற பல துன்பங்கள் வரும்போது நாம் கலங்கிடாமல் முறுமுறுக்காமல் என் வாழ்க்கையில் இப்படி வந்துவிட்டதே எனக்கு ஏன் இது வந்தது? என

அங்கலாய்த்துப் புலம்பி பின்வாங்காமல், இந்நேரத்தில் **என் தேவனின் கண்** என்மீது விசேஷித்த நிலையில் நோக்கமாயிருக்கிறது. அவர் என்னை உயிரோடு காப்பார் என்று அறிந்துகொண்டு கர்த்தரைப் பின்பற்றுவோமாக.

**4) தேவனின் பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளமுடியும். சங் 119:71**

**நான் உபத்திரவப்பட்டது நல்லது** என்று சங்கீதக்காரன் சொல்கிறான். **அதினால் என்ன நன்மை?** உமது **பிரமாணங்களை,** தேவ கட்டளைகளை, **வார்த்தைகளை** கற்றுக்கொள்ள முடிகிறது. ஆம். தேவனுடைய பிரமாணங்களை, வார்த்தைகளை கற்றுக்கொள்வது எவ்வளவு நல்லது. அதினால்தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, தமது பாதத்திலே அமர்ந்து அவரது பிரமாணங்களை, வார்த்தைகளைக்கற்றுக்கொண்ட மரியாளைக்குறித்து **"தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்".** என்று புகழ்ந்தார். தேவ பிரமாணங்கள் வார்த்தைகள் தான் நம்மைவிட்டு எடுபடாத நல்ல பங்கு நல்ல ஆசீர்வாதம் என்பதாகும்,என்பதாகும், மற்ற எல்லா ஆசீர்வாதங்களும் எடுபட்டுபோம். எனவே இந்த எடுபடாத நல்ல பங்காகிய தேவ வார்த்தைகளைகள் கற்றுக்கொள்ள உபத்திரவப்படவேண்டும். **துன்பப்பட வேண்டியது அவசியம்.** ஆனால் சங்: 119:67ல் **"நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பிநடந்தேன்"** என்று சங்கீதக்காரன் தனது அனுபவத்தை எழுதுகிறான். யுத்தத்திற்குச் சென்று துன்பத்தையும் உபத்திரவத்தையும் அனுபவிக்கவேண்டிய தாவீது, துன்பப்படாமல் **சொகுசாக வீட்டில் இருந்தபடியால்** தேவ வழியைவிட்டு தப்பி, சாட்சியை இழந்தான். தோல்வியடைந்தான். **"சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்**?(1தீமோ 5:6) நம் வாழ்க்கையில் உபத்திரவம். துன்பமில்லையென்றால் வழி தப்பி பாவத்தில் வீழ்வோம். ஆனால் துன்பம் உபத்திரவம் வரும்போது தேவ பிரமாணங்களை கற்றுகொள்கிறோம். தேவனிடம் நமக்கு நெருக்கம் அதிகம் உண்டாகும். எனவே துன்பப்பட வேண்டியது அவசியமே.

**5) துன்பப்பட்ட அளவுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும். சங். 90:15.**

'தேவரீர் எங்களைச் **சிறுமைப்படுத்தின நாட்களுக்கும்** நாங்கள் **துன்பத்தைக் கண்ட** வருஷங்களுக்கும் **சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்."** இது **மோசேயின் ஜெபமாக** இருப்பினும் **இதன் பொருள் என்ன?** துன்பப்பட்ட அளவுக்கு **மகிழ்ச்சியைக் கொடுக்கிறவர்தான் நம் தேவன். என்பதுதான் அதன் அர்த்தம்** யாத் 15:22-27 வரை வாசிக்கும்போது விடுதலை பெற்ற தேவ ஜனம், இஸ்ரவேலர்கள் **மூன்று நாட்கள்** தண்ணீர் இல்லாமல் சூர் வனாந்திரத்திலே **துன்பப்பட்டார்கள்.** பின்பு **மாராவுக்கு** வந்தபோது அங்கு **தண்ணீர் இருந்தது.** ஆனால் குடிக்க முடியாதபடி கசப்பு, துன்பத்திற்குமேல் துன்பம். **வாழ்க்கையே கசப்பாகிவிட்டது.** இப்படிப்பட்ட அனுபவம் நமக்கும் வருகிறது அல்லவா. ஆனால் முடிவு என்ன? துன்பத்தினால் செத்து மடிந்தார்களா? இல்லையே. மாறாக **துன்பப்பட்ட அளவுக்கு கர்த்தர் மகிழ்ச்சியை உண்டாக்கினார்.** ஏலீமுக்கு அவர்களைக்கொண்டு வந்தார். அங்கே 12 **நீரூற்றுகள்** 70 **பேரீச்சமரங்கள்.** எத்தனை மகிழ்ச்சி வனாந்திரத்திலே பட்ட துன்பங்களுக்குத் தக்கதாக **பாலைவன சோலையிலே மகிழ்ச்சியைத் தந்தார் கர்த்தர்.** ஆம் இந்த வனாந்திர உலகத்திலே வாடி வதங்கி அவருக்காய் துன்பத்தை அனுபவிக்கிற தேவ பிள்ளைகளுக்கு பளிங்கைப்போன்ற தெளிவான ஜீவத்தண்ணீருள்ள நதி. அதன் இருகரையிலும் பன்னிரண்டு விதமான **கனிகளைத்** தரும் **ஜீவ விருட்சம்** நிறைந்த **பரலோகச் சோலையிலே** நம்மைச் சேர்த்து நாம் துன்பப்பட்ட அளவுக்கு நம்மை மகிழ்ச்சிப்படுத்தும்படி நமது கர்த்தராகிய இயேசு திரும்ப வரப்போகிறார்.



# வாழ்த்துகிறோம்

**TELC (Tamil Evangelical Luthran Church) ன்** 13வது பேராயராக தெரிந்தெடுக்கப்பட்ட **Rev. D. டேனியல் ஜெயராஜ்** அவர்களை ஜாமக்காரன் சார்பில் வாழ்த்தி வரவேற்கிறோம்.

பிஷப் Rt. Rev. D. DANIAL JAYARAJ அவர்களின் காலத்தில் TELC திருமண்டல சபைகளில் சமாதானமும் பெருகவும் சபைகள் வசனத்தில் வளரவும் கர்த்தர் அருள் புரிவாராக.

கன்னியாகுமாரி பேரயத்துக்கு பெப்ரவரி 8ம் தேதி பிஷப் எலக்ஷன் நடைபெற போகிறது. எந்த பிரச்சனையும் இல்லாமல் ஏகமனதாக ஆவிக்குரிய நபரை பிஷப்பாக தெரிந்தெடுக்க கர்த்தர் அருள்புரிவாராக.

**FEBRUARY - 2019**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.